**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.161/2019**

**19.11.2025. அ.சா.8 பொன்னுரங்கம் த/பெ. சவரிமுத்து**

A1 and 3 present. A2 absent. Petition U/s. 317 Crpc filed and allowed.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கூலி வேலை செய்கிறேன். கூலி வேலை என்றால் எல்லா வேலைக்கும் செல்வேன். கிணறு வெட்டும் வேலைக்கும் செல்வேன். சம்பவம் நடந்த அன்று நான் கிருஷ்ணன் என்பவர் நிலத்தில் கிணறு வெட்டும் வேலை செய்ய சென்றிருந்தேன் என்றால் சரிதான். நான் கிரேன் கட்டி வேலை செய்துவந்தேன். நான் வேலை செய்த கிணறு பழைய கிணறு. அதில் சுமார் 10 கஜம் ஆழம் இருக்கும். நான் உள்ளே மண் எடுத்துக்கொண்டிருந்தபோது சத்தம் கேட்டதா என்றால் இயற்கை உபாதையின் காரணமாக வெளியே வந்தபோது சத்தம் கேட்டது.

கிருஷ்ணன் நிலத்தில் இருந்து ராஜம்மாளின் நிலம் சுமார் 500 அடி தூரம் இருக்கும். என்னுடன் 7 முதல் 8 பேர் வேலை செய்தார்கள். கிருஷ்ணனும் எங்களுடன்தான் இருந்தார். என்னுடன் வேலை செய்த 7, 8 நபர்களும் உள்ளுரை சேர்ந்தவர்களா என்றால் வெளியூரை சேர்ந்தவர்கள். நானும் கிருஷ்ணனும் சேர்ந்து சத்தம் கேட்ட இடம் நோக்கி சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் சென்றபோது அந்த இடத்தில் சுமார் 10-20 நபர்கள் இருந்தார்கள். நாங்கள் சென்று அரை மணி நேரம் கழித்து 108 ஆம்புலன்ஸ் அங்கு வந்தது. நான் கிணறு வேலை செய்திருந்ததால் என்னால் உடன் செல்ல இயலவில்லை. யார்யார் ஆம்புலன்சில் சென்றார்கள் என்று நான் பார்க்கவில்லை.

நான் சம்பவ இடத்தை பார்த்துவிட்டு வந்தபிறகுதான் அங்கு ஆம்புலன்ஸ் வந்தது. சம்பவ இடத்தில் இருந்த 10 , 20 நபர்களில் உள்ளுர் மற்றும் வெளியூர் நபர்கள் இருந்தார்கள். என்னுடைய முதல் விசாரணையில் ராஜசேகர் இறந்துபோன ராஜம்மாளின் தலையில் கொம்பால் அடித்தார் என்ற விவரத்தையும் அவர் கீழே விழுந்துவிட்டார், தலையில் காயம்பட்ட ராஜம்மாளை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்ற விவரத்தையும் போலிசார் விசாரணையிலும் சொன்னேன். ராஜசேகருக்கும் ராஜம்மாளுக்கும் என்ன பிரச்சனை இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் நிலப்பரிச்சனை இருந்தது.

ராஜம்மாளை நாங்கள் முதலாளி அம்மா என்று கூப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான்.

ராஜம்மாளுக்கும் எதிரிகளுக்கும் பேச்சுவார்த்தை இல்லை. அதனால் நானும் எதிரிகளிடம் பேசுவது இல்லை என்றால் சரியல்ல. ஆனால் நானும் எதிரிகளுடம் பேசுவது இல்லை. இறந்துபோன ராஜம்மாள் எனது முதலாளி என்பதால் நானும் எதிரிகளுடன் பேசாமல் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எங்களுடன் எதிரிகள் பேசுவது இல்லை. அதேபோல் நானும் அவர்களுடன் பேசுவது இல்லை. நான் வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

முதலாளி இறந்துவிட்டார் என்பதால் போலிசார் சொல்லிக்கொடுத்தவாறு முதல் விசாரணையில் சாட்சி அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னவாறு நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணனின் நிலம் ராஜம்மாளின் நிலத்திற்கு கிழக்கே உள்ளது. கிருஷ்ணன் மற்றும் ராஜம்மாளின் நிலங்களுக்கு இடையே மற்றவர்களின் நிலமும் உள்ளது என்றால் சரிதான். என் முதலாளியம்மாளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.